ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கம்: 622 பேர் பலி

நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டம்

குணார், செப் 1–

ஆப்கானிஸ்தானின் குணார் மாகாணத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானது. 622 பேர் பலியானதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் 1300க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

முதலில் பதிவான நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 6.0 என பதிவாகியிருந்ததாகவும், அடுத்தடுத்து 4.5 ரிக்டர் அளவில் பதிவானதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலநடுக்கம் பாகிஸ்தான் மற்றும் டெல்லி உட்பட வட இந்தியாவிலும் உணரப்பட்டது. கட்டடங்கள் குலுங்கின, இதனால் மக்கள் வெளியே விரைந்து சென்றனர்.

ஆப்கானிஸ்தானின், நகங்கர் மாகாணத்தில் ஜலாலாபாத்தை மையமாகக் கொண்டு வடகிழக்கே 27 கிலோ மீட்டர் தொலைவில், 8 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. 20 நிமிடங்களுக்கு பிறகு, மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. 10கிலோமீட்டர் ஆழத்தில் 4.5 ரிக்டர் அளவில் பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் ஆப்கானிஸ்தான் கட்டடங்களின் இடிபாடுகளில் ஏராளமானோர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நூர்குல், சோகி, வாட்பூர், மனோகி மற்றும் சபதரே மாவட்டங்களில் குறைந்தது 250 பேர் பலியானதாகவும், 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் குனார் பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

ஒரே மாகாணத்தில் அடுத்தடுத்து 3 கிராமங்கள் ஒட்டுமொத்தமாக சேதமடைந்துள்ளது. ஒரு கிராமத்தில் 30 பேர் பலியானதாகவும் முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. இடிபாடுகளில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. மீட்புப் பணியில் பாதுகாப்புப் படையும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பல இடங்களின் சாலைகள் கட்டட இடிபாடுகளால் சூழப்பட்டிருப்பதால், மீட்புக் குழுவினர் நுழைய முடியாமல் உள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயங்களுடன் மருத்துவமனைக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

சாலை வழியாக மருத்துவமனை கொண்டு வர முடியாதவர்களை வான் வழியாக கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆழமற்ற நிலநடுக்கங்கள் அதிக சேதத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில நாட்களுக்கு முன்பு, கடுமையான வெள்ளத்தால் அந்நாடு பாதிக்கப்பட்டிருந்தது. வெள்ளத்தைத் தொடர்ந்து நிலச்சரிவு உள்ளிட்டவற்றால் உள்கட்டமைப்புகள் பெரிதும் சேதமடைந்திருந்த நிலையில் நிலநடுக்கம் அதன் கோர முகத்தைக் காட்டியிருக்கிறது. இதனால் மீட்புப் படையினர் பல ஊர்களுக்குச் செல்ல சாலை வசதிகள் இன்றி தவித்து வருகிறார்கள்.

கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் நேரிட்ட நிலநடுக்கத்தால் ஆயிரம் பேருக்கும் மேல் பலியான நிலையில், இயற்கைச் சீற்றங்களால் அதிகம் பாதிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் முன்னணி இடம் பிடிக்கிறது.

அமெரிக்காவின் 50% வரி விதிப்பால் பாதித்திருக்கும் தொழில்களுக்கு உதவித் திட்டம்: மத்திய அரசுக்கு ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, செப் 1–

அமெரிக்க அரசின் 50 விழுக்காடு வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களை ஆபத்திலிருந்து பாதுகாக்கும் வகையிலும், நாட்டின் ஏற்றுமதிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை ஈடுகட்டும் வகையிலும், மானியம், வரி விலக்குச் சலுகைகள், ஊக்கத்தொகை, பிற நாடுகளுக்கான ஏற்றுமதியை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கிய ஓர் உதவித் திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசை ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்தியாவிலிருந்து அமெரிக்க நாட்டிற்கு ரத்தினக் கற்கள், ஆபரணங்கள், ஆடைகள், பாதணிகள், மரச்சாமான்கள், தொழில் துறை ரசாயனங்கள் உள்ளிட்டவை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலையில், சென்ற மாதம் 27–ம் தேதியிலிருந்து இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்க நிர்வாகம் 50 விழுக்காடு வரியை விதித்துள்ளது.

இதன் காரணமாக, 87 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி 50 பில்லியன் டாலராக குறையக்கூடும் என்றும், இதன் காரணமாக இந்திய ஏற்றுமதித் துறையின் போட்டித் தன்மை, நிலைத் தன்மை மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை அச்சுறுத்தலுக்கு ஆளாகும் என்றும் கூறப்படுகிறது.

ஜவுளித் துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகின்ற சூழ்நிலையில், தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு ஆயத்த ஆடைகள் மற்றும் ஜவுளிப் பொருட்கள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தற்போதைய அமெரிக்க அரசினுடைய ஐம்பது விழுக்காடு வரி விதிப்பின் விளைவாக ஜவுளித் துறைக்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொழிலதிபர்கள் மத்தியில் அச்சம்

அமெரிக்க அரசின் 50 விழுக்காடு வரி விதிப்பை சமாளிக்க மிகப் பெரிய வரி விலக்கு அளிக்கப்படும்; பொருட்கள் மற்றும் சேவை வரிகள் குறைக்கப்பட்டு எளிமையாக்கப்படும்; நிதி உதவிகள் செய்யப்படும்; சந்தையை மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்றவற்றிற்கு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தாலும், இது குறித்த கொள்கை எதையும் மத்திய அரசு இதுவரை வகுக்காதது தொழிலதிபர்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் மிகப் பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்திய ஆடைகளுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு பெற்றுத் தரவும், பொருட்கள் கப்பலில் ஏற்றப்படும் இடத்தில் உள்ள மொத்த விலை மதிப்பில் 20 விழுக்காடு ஊக்கத் தொகை அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

பஞ்சாப் வெள்ளம்: பள்ளி, கல்லூரிகளுக்கு 3–ந்தேதி வரை விடுமுறை

அமிர்தசரஸ், செப்.1–

பஞ்சாபில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக பள்ளி, கல்லூரிகளுக்கு 3ம் தேதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள பாதிப்பு குறித்து கவர்னர், முதல்வரை தொடர்புகொண்டு மத்திய அமைச்சர் அமித்ஷா கேட்டறிந்தார்.

பஞ்சாபில் உள்ள பல மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் ஜம்முகாஷ்மீரில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக சட்லஜ், பியாஸ் மற்றும் ரவி ஆறுகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக பஞ்சாப் பெரும் வெள்ளப்பெருக்கை சந்தித்து வருகிறது. மேலும் வெள்ளத்தால் குருதாஸ்பூர், பதான்கோட், பாசில்கா, கபுர்தலா, டர்ன் தரன், பெரோஸ்பூர், ஹோஷியார்பூர் உள்ளிட்ட கிராமங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பல மாவட்டங்களில் நேற்று இரவு முதல் கன மழை பெய்து வருகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ஆகஸ்ட் மாதத்தில் பஞ்சாபில் 25 செ.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பை விட 74 சதவீதம் அதிகமாகும். அதேசமயம் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகளவு மழை பெய்துள்ளது என்று



தெரிவித்தனர். இதனிடையே பிரதமர் மோடிக்கு பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் எழுதிய கடிதத்தில், பஞ்சாப் கடந்த பல தசாப்தங்களில் கண்ட மிக மோசமான வெள்ள பேரழிவுகளில் ஒன்றை எதிர்கொண்டு வருகிறது. இந்த வெள்ளம் சுமார் 1,000 கிராமங்கள் மற்றும் லட்சக்கணக்கான மக்களை பாதித்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் பஞ்சாபில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பு குறித்து கவர்னர் குலாப் சந்த் கட்டாரியா, முதல்வர் பகவந்த் மான் ஆகியோரை தொடர்புகொண்டு மத்திய அமைச்சர் அமித்ஷா கேட்டறிந்தார் என்று அதிகாரிகள் கூறினர்.

அப்போது வெள்ள நிலையை சமாளிக்க தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று இருவருக்கும் அவர் உறுதியளித்ததாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கனமழை காரணமாக அனைத்து கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாலிடெக்னிக் நிறுவனங்களுக்கு 3ம் தேதி வரை அரசு விடுமுறை அறிவித்துள்ளது. முன்னதாக கடந்த 27 முதல் 30 வரை அனைத்துப் பள்ளிகளுக்கும் மட்டும் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த விடுமுறையானது அனைத்துப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் என 3ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் சோமசுந்தரத்தின் தந்தை மரணம்: எடப்பாடி இரங்கல்

சென்னை, செப்.1–

முன்னாள் அமைச்சர் சோமசுந்தரத்தின் தந்தை தா. விநாயக முதலியார் மறைவுக்கு எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி. சோமசுந்தரத்தின் தந்தையும், காமதேனு பால் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவரும், நெசவாளர் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவரும், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி முன்னாள் இயக்குநருமான தா. விநாயக முதலியார் வயது முதிர்வால் காலமானார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன்.

பாசமிகு தந்தையை இழந்து மிகுந்த வேதனையில் வாடும் அன்புச் சகோதரர் சோமசுந்தரத்துக்கும், அவரது குடும்பத்தினருக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், விநாயக முதலியாருடைய ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பாதுகாப்பு பணியில் 18 ஆயிரம் போலீசார்

சென்னையில் 4 இடங்களில் அமைதியான முறையில் விநாயகர் சிலைகள் கடலில் கரைப்பு

அமைதியாக நடத்த துணை நின்ற காவல்துறை அதிகாரிகளுக்கும், ஊர்க்காவல் படைக்கும் கமிஷனர் அருண் பாராட்டு

சென்னை, செப் 1–

சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 4 கடற்கரை பகுதிகளில் சென்னை பெருநகரம், தாம்பரம் மற்றும் ஆவடி ஆணையரக எல்லைகளுக்குள் நிறுவப்பட்ட 2,054 விநாயகர் சிலைகள் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அமைதியான முறையில் கரைக்கப்பட்டது.

கடந்த 27ந் தேதி அன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பல்வேறு இந்து அமைப்புகள் மற்றும் பொதுமக்கள், காவல்துறை அனுமதி பெற்று, சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது இடங்களில் 1,519 விநாயகர் சிலைகளை நிறுவி உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடித்து வழிபாடு செய்து வந்தனர்.

வழிபாடு செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் நேற்று (31ந் தேதி) காவல்துறையால் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் வாகனங்களில் ஏற்றி ஊர்வலமாக எடுத்துச் சென்று பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் நீலாங்கரை, பல்கலைநகர், காசிமேடு மீன்பிடி துறைமுகம், திருவொற்றியூர், பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய 4 கடற்கரைகளில் கரைக்க அனுமதி வழங்கப்பட்டது.

சென்னை பெருநகர காவல்



ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின்பேரில், சிலைகளுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கியும், சட்டம் மற்றும் ஒழுங்கு நிகழ்வுகள் ஏதுமின்றி தகுந்த பாதுகாப்புடன் இன்று விநாயகர் ஊர்வல பாதைகளிலும், கடற்கரைகளிலும் சிலைகளை கரைப்பதற்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து காவல்துறையினர் அரும்பங்காற்றினர்.

மேலும் 2 ராட்சத கிரேன்கள் உட்பட 8 கிரேன்கள், 8 ஜேசிபி இயந்திரங்கள், டிராலிகள் பயன்படுத்தப்பட்டும், 8 கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு, பைனாகுலர் மூலம் கண்காணித்தும், 54 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டும் 13 டிரான் கேமராக்கள் மூலம் கண்காணித்து, 7 ஆம்புலன்ஸ் வாகனங்கள், 3 தீயணைப்பு வாகனங்கள் நிறுத்தப்பட்டும், மற்றும் மீட்பு பணிக்காக கடலோர பாதுகாப்பு படையினரின் 2 கப்பல்களுடன் கடலோர காவல் படையினர் மற்றும் நீச்சல் தெரிந்த தன்னார்வலர்களுடன் படகுகள் தயார் நிலையிலும் நிறுத்தி வைக்கப்பட்டு, சிறப்பான முறையில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. விநாயகர் சிலை ஊர்வல பாதைகள் மற்றும் மேற்படி சிலை கரைக்கும் இடங்களில், சட்டம் மற்றும் ஒழுங்கு, போக்குவரத்து, சிறப்பு பிரிவு, ஆயுதப்படை, ஆயுதப்படையின் அதிவிரைவுப் படை, தமிழ்நாடு சிறப்பு படை என 16,500 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும் 1,500 ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலையில் ஆ.அருண் சிறப்பாக பாதுகாப்பு பணிகள் மேற்கொண்டு அமைதியான முறையில் விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கப்பட்டதையொட்டி, சென்னை பெருநகர காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் ஊர்க்காவல் படையினரை வெகுவாக பாராட்டினார்.

பெயர் மாற்றம்

Old Sur Name: Fazlullah Mohamed Old Given Name: Azamathullah, தந்தை பெயர்: Fazlullah பிறந்த தேதி: 11.04.1973 எண்.44, பெரியார் தெரு, பாலாஜி நகர், அனகாபுத்தூர், சென்னை – 600 070, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Sur Name: **FAZLULLAH** New Given Name: **MOHAMED AZAMATHULLAH** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Sur Name: Fazlullah Mohamed Old Given Name:Azamathullah

பெயர் மாற்றம்

ரணவ் மடி ரெட்டி, பிறந்த தேதி: 30/12/2010, எண்: F 104, 3வது தெரு, அண்ணா நகர் (கிழக்கு) சென்னை – 600102, தமிழ்நாடு, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **ரணவ் ரெட்டி** என்று அழைக்கப்படுகிறார்.

வைஷ்ணவி ரெட்டி (தாய்)

படிவம் வின் 6

[விதி 7ஐப் பார்க்கவும்]

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் டிவிஷன் பெஞ்ச் I, சென்னை

வான்சன் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்

(நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் துவக்கப்பட்ட நிறுவனம்)

CP(CA)/19(CHE)/2025

திரு. சண்முகலிங்கம் சுதர்சன்,
வான்சன் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பங்குதாரர்,
CIN U70101TN2007PTC063623
7F, ஜமால் ஷ்ரிதன் மேனர், 2வது பிளாக்,
55/2, ஆற்காடு சாலை, சாலிகிராமம், சென்னை – 600 093. ... மனுதாரர்

எதிர்

நிறுவனங்களின் பதிவாளர்
பிளாக் எண்.6, பி விங், 2வது மாடி, சாஸ்திரி பவன்
26, ஹாடோஸ் சாலை, சென்னை – 600 034. ...பிரதிவாதி

மனு குறித்த விளம்பரம்

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனத்தை மூடுவதற்கான மனு ஒன்றை சென்னையில் உள்ள தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தில் **வான்சன் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட், (CIN U70101TN2007PTC063623), 7F, ஜமால் ஷ்ரிதன் மேனர், 2வது பிளாக், 55/2, ஆற்காடு சாலை, சாலிகிராமம், சென்னை – 600 093–ன்** (பங்குதாரர் மற்றும் பங்களிப்பாளர்) பங்குதாரரான திரு. சண்முகலிங்கம் சுதர்சன் அவர்கள், மார்ச் 12, 2025 அன்று மேற்கூறிய தீர்ப்பாயத்தில் சமர்ப்பித்தார். அந்த மனு மீதான விசாரணை வரும் **அக்டோபர் 8, 2025** அன்று தீர்ப்பாயத்தின் முன் வருகிறது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்படி மனுவின் மீது உத்தரவு பிறப்பிப்பதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் எந்தவொரு பங்களிப்பாளரோ அல்லது பிற நபரோ, மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியால் கையொப்பமிடப்பட்ட அவரது நோக்கம் குறித்த அறிவிப்பை அவரது பெயர் மற்றும் முகவரியுடன் மனுவை விசாரிக்க நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விசாரணையில் நேரில் அல்லது அவரது பிரதிநிதி மூலம் ஆஜராக வேண்டும். மனுவின் நகலை, கீழே கையொப்பமிட்டவர், அதற்கான பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தியவுடன், எந்தவொரு கடனாளிக்கோ அல்லது பங்களிப்பாளருக்கோ வழங்குவார். மனுவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் எந்தவொரு பிரமாணப் பத்திரமும் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும், மேலும் விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னதாக மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அதன் நகலை வழங்க வேண்டும்.

ஒப்பம்/–
எஸ்.ஷிவ்சங்கர் பி.காம்., பி.எல்.
IBBI/IPA-001/IP-P-02141/2020-2021/13294
M/s. **வான்சன் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்டின்**
தற்காலிக கலைப்பு அலுவலர், சென்னை.
shivshanker93@gmail.com
94431-41900.

தேதி : 30.08.2025

பொது ஏல அறிவிப்பு

IXவது உதவி நீதிபதி
சிட்டி சிவில் கோர்ட், சென்னை-600 104
E.P.No. 2843 of 2021
in
ACP No. 8 of 2017
T.J.Financial Consultancy and Investments (P) Ltd., ...மனுதாரர்

எதிர்

Mr.S.V.S. Kannan and 2 others ... எதிர்மனுதாரர்

To
Mr.S.V.S. Kannan, S/o.S.V. Sampath
New No.4, Old No.8, Sri Hayagreeva Flat, G-1,
Ground Floor, Baroda 2nd Street,
West Mambalam, Chennai–600 033 JD1

மேற்கண்ட E.P.மனுவில் 9வது உதவி நீதிபதி, சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் 17.09.2025 அன்று 1வது எதிர்மனுதாரரின் கீழ்கண்ட சொத்தை மனுதாரரின் கடனை அடைப்பதற்கு பொது ஏல விற்பனையில் விற்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட சொத்தை ஏல விற்பனை செய்ய 17.09.2025 அன்று மாலை 4 மணிக்கு சென்னை சிட்டி சிவில் கோர்ட் வளாகத்தில் ஏலம் நடைபெறும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

SCHEDULE OF PROPERTY

Schedule - A

All that piece and parcel of the land and building at Old Door No.8, New Door No.4, Plot No.7, Sri Hayagreeva Flat, No.G1, Ground Baroda 2nd Lane, West Mambalam, Chennai–600 033, comprised in S.No.595/3, T.S.No.8, Stotrium Village of Puliyur, measuring totally an extent of 4300 Sq.ft. Block No.51 and bounded on the

North By : Plot No.8, belonging to Veeraraghavachariar
South By : Plot No.6, belonging to Sri Kuppusamy Sastrigal Rukmini Ammal and G.V.Krishnamoorthy
East By : House 34, 36,37 Baroda Street, belonging to Bala Govinda Doss
West By : 33 feet wide Corporation St, Baroda Street

And its linear measurements:
North to South on the Eastern side : 50"-0"
North to South on the Western side : 50"-0"
East to West South on the Southern side: 86"-0"
East to West on the Northern side: 86"-0"

And situate within the Registration District of Chennai South and Sub Registration District of Kodambakkam

Schedule-B

482 Sq.ft. of Undivided Common Share Land of Schedule "A" Schedule Property.

A.R.NIXON, S. RAJAKUMARI,
Counsel for Decree Holder
No.146, Addl Law Chambers,
High Court, Chennai-600104

ஜகாட் ஹைடெக் டூல்ரூம் லிமிடெட்

CIN : L27209TN1991PLC021330

பதிவு அலுவலகம்: எண்.131/2, திருநீர்மலை ரோடு, நாகல்கேணி, குரோம்பேட்டை, சென்னை - 600 044. E-mail: info@iykot.com | Website : https://www.iykot.com

34வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்-வாக்களிப்பு மற்றும் புத்தக மூடல் தேதிகள் பொது அறிவிப்பு

'ஜகாட் ஹைடெக் டூல்ரூம் லிமிடெட் ('நிறுவனம்') உறுப்பினர்களின் 34வது ஆண்டு பொதுக் கூட்டம் (AGM) ஆகஸ்ட் 04, 2025 தேதியிட்ட AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சாதாரண மற்றும் சிறப்பு வணிகங்களை பரிவர்த்தனை செய்வதற்காக, காணொளி காட்சி ('VC')/பிற ஒலிஒளி சாதனங்கள் மூலம் ('OAVM') **செவ்வாய்க்கிழமை, 23 செப்டம்பர் 2025 அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** (IST) நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிப்பு அளிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013 (''சட்டம்''), அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (''SEBI'') (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 (''பட்டியல் விதிமுறைகள்'') கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (''MCA'') உடன் படிக்கப்பட்டது . செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 09/2024, அதே விஷயத்தில் MCA வெளியிட்ட முந்தைய சுற்றறிக்கைகள் (''MCA சுற்றறிக்கைகள்''), மற்றும் அக்டோபர் 3, 2024 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD-PoD/2/P/CIR/2024/133, அதே விஷயத்தில் SEBI வெளியிட்ட முந்தைய சுற்றறிக்கைகளுடன் படிக்கப்பட்டது (''SEBI சுற்றறிக்கைகள்''), AGM நடைபெறும் இடத்தில் உறுப்பினர்கள் நேரடி வருகை தேவையில்லை, மேலும் வருடாந்திர பொதுக்கூட்டம் AGM காணொலி காட்சி VC அல்லது பிற ஒலிஒளி காட்சி சாதனங்கள் மூலம் நடத்தப்படலாம். OAVM எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் 34வது AGM-ல் கலந்து கொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம், மேலும் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 103 இன் கீழ் குறைந்தபட்சத்தை கணக்கீடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

மேலும் அரசின் பெரு நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம் MCA சுற்றறிக்கைகள் மற்றும் இந்திய பத்திரங்கள் பதிவர்த்தனை வாரியம் SEBI சுற்றறிக்கைகள் வருடாந்திர அறிக்கையின் அச்சு நகல்களை அனுப்புவதிலிருந்து தளர்வு அளித்துள்ளன (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகின்றன). மேலே உள்ள பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும், வருடாந்திர அறிக்கையின் காகித வடிவ நகல்களை அனுப்புவதில் உள்ள சிரமங்கள் காரணமாகவும், 2024-2025 நிதியாண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையின் மின்னணு பிரதிகள் / வலை இணைப்பு ஏற்கனவே நிறுவனம் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்) உடன் மின்னஞ்சல் இணையுதள முகவரிகள் பதிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அனுப்பப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். இருப்பினும், பட்டியல் விதிமுறைகளின் விதிமுறை 36(1)(b) இன் படி, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பைக் கொண்ட வருடாந்திர அறிக்கையின் முழுமையான விவரங்கள் கிடைக்கக்கூடிய சரியான பாதை உட்பட இணையுதள இணைப்பைக் கொண்ட ஒரு கடிதம், நிறுவனம், ஏதேனும் டெபாசிட்டரிஸ் அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA), அதாவது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெடில் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, 2024-25 நிதியாண்டிற்கான வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பைக் கொண்ட வருடாந்திர அறிக்கையின் முழுமையான விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரியான வழியில் மற்றும் வலைதள இணைப்பில் கிடைக்கும் :

- வலைத்தளம்: https://iykot.com/
- சரியான பாதை: https://iykot.com/investor-relations/34th-agm/

34வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் அறிவிப்பு மற்றும் 2024-2025 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் வலைத்தளத்திலும் (https://iykot.com/), BSE லிமிடெட் மற்றும் டெபாசிட்டரிகளின் வலைத்தளங்களில் கிடைக்கும், மேலும் இந்த தளங்களிலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

டீமெட்டீரியலைஸ்ட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலம் தங்களின் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை தங்களின் தொடர்புடைய டெபாசிட்டரிகளுடன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (இங்கு 'ஆர்டீஏ' என குறிப்பிடப்படுகிறது) உடன் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிக்க நிறுவனம் அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மற்றும் மின்-வாக்களிக்கும் வசதியை வழங்கும். கூடுதலாக, வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்-வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்குகிறது. விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனிகள் சட்டம், 2013, பிரிவு 91ன்படி, கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் **புதன் கிழமை, 17 செப்டம்பர், 2025 முதல் செவ்வாய் கிழமை, 23 செப்டம்பர் 2025 முடிய (இரு நாட்களும் சேர்த்து)** மூடப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்பட்டு